2017 ஜூன் 28] [திரு. டி. ஜெயக்குமார்]

அந்தக் கருத்துகளை எடுத்து வைக்கும்போது, அவர்களும் அதற்கு ஆதரவு தருகின்ற நிலையிலே, நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நல்ல ஒரு முடிவு எட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

(இ) கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. மதிவாணன், என்ன? தகவல் கோரலுக்கு முன்னரே கேட்க வேண்டுமென்றால், நேரம் இருக்க வேண்டுமல்லவா? (குறுக்கீடு) கேளுங்கள், கேளுங்கள்.*

***திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23 ஆம் தேதி இரவு என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, அக்கரைப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 8 மீனவர்களும், அவர்கள் மீன் பிடிக்க எடுத்துச் சென்ற விசைப் படகுகளும் இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டு, 8 மீனவர்களும் யாழ்ப்பாணம் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் மாத்திரம் 2015-லிருந்து இதுவரையில் 25 விசைப் படகுகள் அங்கே சிக்கியிருக்கின்றன. 5 நாட்டுப் படகுகள் அங்கே சிக்கியிருக்கின்றன. மீனவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்ற ஒரு நிரந்தரத் தீர்வை இந்த அரசு காண வேண்டும். மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, அங்கே கைதாகியிருக்கிற அந்த மீனவர்களை மீட்டெடுப்பதோடு, அவர்களுக்கு வாழ்வாதாரமாக இருக்கக்கூடிய அந்த விசைப் படகுகளையும் மீட்டுத் தருவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. சாமி, நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். அதை நான்* record *செய்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்களும் கேட்டிருக்கிறீர்கள். அதையும் நான்* record *செய்துவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இதே பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையினுடைய சமீபத்திய போக்கு மிகவும் கண்டனத்திற்குரியதாகவும், கவலைக்குரியதாகவும், (குறுக்கீடுகள்) இனிமேல் இதையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாது என்று (குறுக்கீடுகள்) ஆணித்தரமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாராவது ஓர் உறுப்பினரைத்தான் நான் அனுமதிக்க முடியும். (குறுக்கீடுகள்) நான் ஓர் உறுப்பினரை அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடு) திரு. சாமி, நீங்கள் இந்தச் சபையை நடத்துவதற்கு எனக்கு ஒத்துழைப்பு தரவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *திரு. கே.பி.பி. சாமி, உங்களுக்கும் சேர்த்துத்தான் பதில் சொல்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் திரு. மதிவாணன் பேசுகிறாரா அல்லது திரு. கே.பி.பி. சாமி பேசுகிறாரா என்று ஏற்கெனவே கேட்டேன். 'நான்தான் பேசுகிறேன்' என்று திரு. மதிவாணன் சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், என்னைப் பார்த்துப் பேசுங்கள். உறுப்பினர்களைப் பார்த்துப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையினுடைய சமீபத்திய போக்கு மிகவும் கண்டனத்திற்குரியதாகவும், அதேநேரத்தில் மிகவும் கவலைகொள்ளத்தக்கதாகவும் இருக்கிறது. நம்முடைய மீனவர்களைத் தாக்குவதை எந்தச் சூழ்நிலையிலும் இனிமேல் நாங்கள் பொறுத்துக்கொள்ள முடியாது என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெள்ளத்தெளிவாக மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியுள்ளார்கள். (குறுக்கீடுகள்) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரிலே பாரதப்*

2017 ஜூன் 28] *[திரு. டி. ஜெயக்குமார்]*

பிரதமரைச் சந்தித்தபோது, இதுகுறித்து அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தினார்கள். இலங்கையின் இத்தகைய போக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதிலே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் மாண்புமிகு முதலமைச்சர் உட்பட நாங்கள் எல்லோரும் தெளிவாக இருக்கின்றோம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் கோரியபடி, அந்தப் படகுகள் மற்றும் மீனவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு விரைவிலேயே நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சாமி, நீங்கள்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்று நான் பதிவு செய்துவிட்டேன். உங்களுடைய பெயரைச் சொல்லிவிட்டேன். பதிவு செய்துவிட்டேன். பிறகு என்ன? நீங்கள் இப்படி வற்புறுத்தக் கூடாது. (குறுக்கீடுகள்) அதாவது, ஒரே கட்சியில் இரண்டு பேர் அறிவிப்புக் கொடுத்தால் இரண்டு பேரையும் பேச அனுமதிப்பதில்லை. ஒருவரைத்தான் பேச அனுமதிப்பேன். (குறுக்கீடுகள்) நான் திரு. மதிவாணன் அவர்களை அனுமதித்துவிட்டேன். நீங்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்று பதிவு செய்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அவ்வளவுதான், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) எனக்கு உறுதுணையாக ஏதாவது வார்த்தை சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றுமில்லை. உங்களுக்கு உறுதுணையாகத்தான் சொல்கிறேன். நாங்களும் வெளியே போய்விட்டோம். அதனால் அதிகமாக நான் பேச விரும்பவில்லை. ஆதாரம் எல்லாம் கேட்டீர்கள். அதனால் விட்டுவிட்டேன். ஆனால், இந்த அவையில் இருக்கக்கூடிய ஓர் அமைச்சர் ஒரு எம்.எல்.ஏ. மீது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன், அது வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேண்டாம், அது அல்ல. (குறுக்கீடுகள்)*